THANKS TO G.GNANAGURUPANDIAN – 9442642112 FOR SENDING THIS MESSAGE TO PUBLISH IN THE WEBSITE



# தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியர் சங்கம், சென்னை மண்டலம்.

## பொது உறுப்பினர் கூட்ட நிகழ்ச்சி குறிப்பு

சங்க 14-வது ஆண்டு பொது உறுப்பினர் கூட்டம் சங்கத் தலைவர் திரு.S.பாலசுப்ரமணியன் அவர்கள் தலைமையில் 20.9.2010 திங்கள் காலை 10.30 மணி அளவில் ஸ்ரீகணேஷ் பவன், 80/1, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை-600 017ல் நடைபெற்றது. முதல் நிகழ்ச்சியாக தமிழ்தாய் வாழ்த்து, பிறகு திரு. V.S.கோபாலரத்தினம் (வயது 93) அவராக முன்வந்து சில பக்தி பாடல்களை சிறப்பாக பாடினார். பின்னர் திரு.K.T.சுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு சங்க தலைவர் திரு.S.பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமையேற்க, செயலாளர் திரு. M.S.தினதயாளன் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தபின் 2009-2010க்கான வரவு செலவு கணக்குகளை திரு.P.S.கிருஷ்ணன் அவர்கள் வாசித்து அவையின் ஒப்புதலைப் பெற்றார். கூட்டத்தில் கௌரவத் தலைவர் திரு.G.மணியன் ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் திரு.V.ஸ்ரீதரன் அவர்கள், கணக்காயர் களத் தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் திரு.ச.வெ.அங்கப்பன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாடு மின்கழக கணக்காயர் களத் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளரும் இந்த ஓய்வூதிய சங்க முதல் உறுப்பினருமாகிய திரு.ச.வெ.அங்கப்பன் அவர்கள் இங்கு துவக்கப்பட்டுள்ள சங்க கட்டிட நிதிக்கு தன் பங்களிப்பாக ரூ.100/- தருவதாகக் கூறி அதனை கூட்டத் தலைவரிடம் ஒப்படைத்து, சங்கத்திற்கென கட்டிடம் கட்டப்படும் வரையில் அல்லது தாம் உயிருடன் இருக்கும் வரையில் மாதாமாதம் ரூ.100/- வழங்கிடுவேன் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து தனது உரையில் குறிப்பிடும் போது, வாரியப் பணியாளர்களுக்கு சங்கங்கள் பல இருந்து செயல்பட்ட போதிலும் ஓய்வூதியர்களுக்கு சங்க அமைப்பு பலமானதாக இல்லாதிருந்த துவக்க கால நிலையினை விவரித்து, 1986க்கு பிறகு வாரியக் களப்பணி ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுகின்ற நிலை வந்தப் பிறகு மின்வாரிய ஓய்வூதியருக்கென ஒரு பலமான அமைப்பு தேவை என்பதையும் அப்படிப்பட்ட அமைப்பு வாரியப் பணியாளருக்கு கட்சி சார்ந்ததாகவோ, பணிவாரியாகவோ உள்ளது போல் இல்லாமல் சாதாரண ஹெல்பர் முதல் தலைமைப் பொறியாளர் வரை பணியாற்றி ஓய்வுப் பெற்ற எல்லார்க்கும் ஒரு அமைப்பு அதுவும் மாநிலம் தழுவியதாக அமையப் பெறுவது அவசியம் எனக் கருதியதால் அப்போதைய சம்மேளனப் பொதுச் செயலாளர் திரு.S.C.கிருஷ்ணன், தொ.மு.ச. பொதுச் செயலாளர் திரு.இரெ.கோவிந்தசாமி, மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் திரு.து.ஜானகிராமன் இவர்களையெல்லாம் அழைத்து இதுபற்றி பேசியதில் அனைவரும் இப்படி அமைப்பு தேவைதான் என்று கருத்தும் ஆதரவும் தெரிவித்த நிலையில், அப்போது ஏற்கெனவே ஓய்வூதியர்கென்று ஒரு அமைப்பை நடத்திக் கொண்டிருந்த பொறியாளர் திரு. L.G.நாராயணசாமி அவர்களையும், திரு.G.மணியன் அவர்களையும் கோ-ஆர்டினேட்டராகக் கொண்டு வாரிய ஓய்வூதியருக்கான மாநிலம் தழுவிய அமைப்புக்கான முயற்சியை துவக்கப்பட்டது. ஆனால் எது நடந்திடக்கூடாது என்று நினைத்தோமோ அது, நடந்துவிட்டது என்று கூறும்படியாக தொ.மு.ச. ஓய்வு பெற்றோர்க்கு தமது கட்சி சார்பான அமைப்பை தொடங்கியும், மத்திய அமைப்பு மற்றும் சம்மேளனமும் ஓய்வூதியர்க்கென தனி அமைப்பாக இல்லாமலே வாரிய ஊழியர்களுக்கான தம்தமது சங்கமே ஓய்வூதியருக்குமாக செயல்படுவது என்ற வகையில் செயல்படவும் நேர்ந்துவிட்டது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அன்று 7 சங்கங்களுடன் செயல்படத் துவங்கி ஆல்போல் வளர்ந்து அருகு போல் வேரூன்றி 35 சங்கங்களின் கூட்டமைப்பாக தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியர்களின் சங்கங்களின் சம்மேளனம் தனது 3வது மாநில மாநாட்டை 11.08.2010 அன்று சென்னையில் சிறப்பாக நடத்தியது மிகவும் பெருமைப்படக்கூடியதாக அமைந்தது.

என்னையும் அழைத்திருந்தார்கள் என்பது மட்டுமல்ல வாரியத்தலைவருக்கு அருகில் இடம் அமைத்துத் தந்தார்கள். வாரியத் தலைவர், திரண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து என்ன ஒரு 2000 பேர் வந்திருப்பார்கள் போலிருக்கிறதே என்றார்கள். 3500 பேர் வந்துள்ளனர் என்று விபரம் சொன்னேன். இந்த சம்மேளனத்தில் எவ்வளவு ஓய்வூதியர் இருப்பார்கள் என்று வாரியத்தலைவர் கேட்டதற்கு வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் இந்த அமைப்பில் உறுப்பினராக உள்ளனர் என்று விபரம் கூறினேன். பணியாளர் ஓய்வு பெறும்போது வழங்கப்படும் ஊதியத்தில் 50 சதவீதம் ஓய்வூதியம் என வந்த பிறகு நாம் ஊதிய ஒப்பந்தத்தின் போது சில அணுகுமுறைகளை மேற்கொண்டோம். 1984 ஊதிய ஒப்பந்தத்தின் முன் வாரிய ஊழியர்களுக்கு காஸ்ட் ஆப் இன்டக்ஸ் அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்பட்டு வந்த நிலையில், வாரிய அதிகாரிகள், தங்களுக்கு அரசு ஊழியர் பெறும் அகவிலைப்படி வழங்குமாறு அரசை கோரினர். அரசும் அவர்களின் கோரிக்கையை பரிசீலனை செய்து கொண்டிருந்த போது நம்மை அதுபற்றி கேட்டனர். அதற்கு நாம் என்ன கூறினோம் என்றால், அவர்களுக்கு நீங்கள் கொடுங்கள் எங்களுக்கு நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்று கூறினோம்.

தொழிற்சங்கம் என்று எடுத்துக்கொண்டால், நம்மைத் தவிர, பல சங்கங்கள் வாரியத்தில் உள்ளனர். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால்

அரசு ஊழியர்கள், White Scholar Job வெள்ளைச்சட்டை ஊழியர்கள், போராடும் குணம் இல்லாதவர்கள். நம் தொழிலாளர்கள் ப்ளூ ஸ்காலர் ஜாப் போராட்டக் குணம் படைத்தத் தொழிலாளி வர்க்கம் நமக்கு காஸ்ட் ஆப் இண்டக்ஸ் தொழிற்துறை விலை உயர்வு புள்ளி அடிப்படையிலான அகவிலைப்படியே தொடர வேண்டும் என்றனர். அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியே நேரடியாக கணக்குப் போட்டு காண்பித்து, இரண்டு வகை அகவிலைப்படியில் எவ்வாறு எவ்வளவு வித்தியாசம் வருகிறது, இதுவரை எவ்வளவு இழப்பை தொழிலாளி சந்தித்துள்ளனர் என்ற விபரத்தை எடுத்துச் சொல்லி நாம் அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியினை பெறும் முயற்சியினை மேற்கொண்டோம்.

அதிகாரிகளுக்கு அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி வழங்குவதைப் போல அரசு ஊழியருக்கான அகவிலைப்படி வழங்க வேண்டும் என்ற நமது போராட்டம் 1984 ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின்போது நிறைவேறாது தள்ளிப்போய் 1988 ஊதிய உயர்வின்போது நிறைவேற்றி ஒப்பந்தம் போடப்பட்டது. தொழிற்துறை புள்ளி விபர அடிப்படையிலான காஸ்ட் ஆப் இண்டக்ஸ் அகவிலைப்படி என்பது 1000 ரூபாய் சம்பளக்காரருக்கும் 10,000 ரூபாய் சம்பளக்காரருக்கும் ஒரே அளவுத் தொகைதான். அதாவது எத்தனை புள்ளி உயர்கிறதோ அதற்கு ஒரு புள்ளிக்கு இவ்வளவு ரூ. என்று அகவிலைப்படித் தொகை உயர்வு அமையும். மாறாக அரசு ஊழியர்க்கான அகவிலைப்படி என நாம் குறிப்பிட்டுப் பெற்ற அதன் விபரம் என்னவென்றால் 10 சதவீத அகவிலைப்படி உயர்வு என்பது ரூ.1000/- சம்பளம் பெறுபவர்க்கு உயர்வு ரூ.100/- அகவிலைப்படியாகவும் ரூ.10,000/- சம்பளம் பெறுபவருக்கு ரூ.1,000/- அகவிலைப்படியாகவும் உயர்வு அமையும். பெறப்படும் ஊதியத்திற்கேற்ப சதவீத அடிப்படையில் அகவிலைப்படி உயர்வு அமையும்.

அதேபோல 1992 ஊதிய உயர்வு ஒப்பந்தம் போடப்பட்ட போது வாரியத்தில் உள்ள எல்லா சங்கங்களும், நம்மைத்தவிர, அடிப்படை ஊதியத்துடன் அகவிலைப்படியை இணைத்து ஊதிய உயர்வு ஒப்பந்த முன்மொழிவு கொடுக்கப்பட்ட நிலையில் நாம் அகவிலைப்படி இணைக்கப்படாத ஊதிய உயர்வு கேட்டோம். அதேப்போல 1992ல் அகவிலைப்படி இணைக்காமல் ஊதிய உயர்வு ஒப்பந்தம் போட்டோம் என்றால் இந்தியாவிலேயே அனேகமாக அதுதான் அகவிலைப்படி இணைக்காது ஊதிய உயர்வுக்கு போடப்பட்ட முதல் ஒப்பந்தமாக இருக்குமென்று நம்புகிறேன்.

அதனைத் தொடர்ந்து 1996ல் ஐந்தாவது ஊதியக்குழு பரிந்துரையின்படி மாநில அரசை ஒட்டி வாரியத்தில் போடப்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தமானது நாம் 1992ல் அகவிலைப்படியை இணைக்காமல் பெறப்பட்ட ஊதிய உயர்வு நிலையினால் 1996ல் ஊதிய உயர்வு மிக கணிசமான அளவாக அமையப்பெற்றதன் பலனை எல்லோரும் பெற்றோம். அதனைத் தொடர்ந்து தற்போது அமைந்த 6வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி போடப்பட்ட ஒப்பந்தப்படி தொடர்ந்து நல்ல பலனைப் பெற்று வருகிறோம். அதாவது தொழிற்சங்க செயல்பாட்டில் எல்லோரும் பழக்கமாகக் கடைப்பிடிக்கும் நடைமுறையில் உள்ள அந்த வழியிலிருந்து விலகி நமது உயர்வுக்கு என்ன வழி என்று சிந்தித்து அதற்கேற்ப அணுகுமுறையை மாற்றி தேர்ந்தெடுத்து செயல்பட்டதால் இந்த உயர்வுகளை எட்டியுள்ளோம். இப்போது பெறப்படும் ஓய்வூதியப் பலன் மகிழ்ச்சிக்குரியதாக இருப்பதன் வரலாறு இதுதான்.

வாரியத்திடம் நாம் பேச்சுவார்த்தை நடத்திடச் சென்றால், பதவி உயர்வு தாமதமாகிறது சரி செய்யுமாறு கேட்டால், வாரியத்திடம் பணமில்லை என்று எதற்கெடுத்தாலும் பதில் சொல்லும் வாரியத்தலைவர் வாரியத்தில் நிதிநிலை சீர்பட ஆலோசனை கூறுங்கள் என நம்மையே கேட்கின்றார் என்றால், நிலைமை அப்படித்தான் இருந்தது. வாரிய ஊழியர்கட்கு சம்பளம் தருவதற்கே பணமில்லை என்ற நிலை, கடன் வழங்க தமக்குள்ள அதிகபட்ச அளவைத் தாண்டி விட்டதால் வங்கிகளும், பவர் பைனான்சும் கூட மேற்கொண்டு வாரியத்திற்கு கடன் வழங்கிட மறுத்துவிட்ட நிலையில் வாரிய ஊழியர்கட்கு சம்பளம் தருவதற்கே பணமில்லை என்ற நிலை என்று தெரியவந்தபோது தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வாரிய நிதி நிலைமைக் குறிப்பிட்டு, தலையிட்டு சரிசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்து கடிதம் எழுதினேன்.

மின் கட்டண உயர்வு மற்றும் வாரிய நிதி நிலை சீரமைப்பு குறித்து மின்வாரியம் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கேட்புக்கூட்டம் சென்னை, மதுரை, கோவை என்று பல இடங்களில் நடத்தியது போல தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நடத்திய கூட்டம் திருச்சியில் 15-5-2010ல் நடைபெற்றபோது அதில் நேரில் கலந்து கொண்டு நமது கருத்தை வலியுறுத்தினோம். விவசாய மின் இணைப்புக்கு இலவசமாக வழங்குவதால் அதன் காரணமாக வாரியத்திற்கு ரூ.250 கோடி ரூபாயும் மற்றும் சலுகை விலையில் மின்சார விநியோகத்தினால் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட ரூ.1250 கோடியும் பெறப்படுவதாக கூறப்பட்டது. ஆனால் மின்சார ஒழுங்குமுறை ஆணைய அறிக்கையிலே விவசாயம் மின்சார பயன்பாடு 11 மில்லியன் யூனிட்டுகள் என்று சொல்லப்பட்டிருந்தது. மின் உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டுக்கு ரூ.4.60 காசுகள் எனவும் அதே அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

இலவசமாக வழங்கப்படும் விவசாய மின்சாரத்திற்கு ஒரு H.P.க்கு ஒரு ஆண்டுக்கு ரூ.250/- வீதம் கணக்கிட்டு பெறப்படுவது சரியான முறையாக இருக்க முடியாது என்றும் விவசாயத்திற்கு ஒரு நாளைக்கு 6 மணி நேர மின் விநியோகம் என்று வைத்துக் கொண்டு வருடத்தில்

8 மாதங்கள் என்று கணக்கிட்டாலும் கூட ரூ.5000 கோடி ரூபாய் வாரியத்திற்கு இழப்பீடாக அரசிடமிருந்து பெற வேண்டும் என்று தான் 2003ம் ஆண்டு மின்வாரிய சட்டவிதி வரையறை செய்துள்ள சரியான வாரிய வருவாய் ஈட்டலாகும் என்பதை புகார் மனுவாக ஆணையத்திடம் நாம் பதிவு செய்துள்ளோம். அதன் விளைவாக 1250 கோடி ரூபாய் வாரியத்திற்கு அரசு இழப்பீட்டுத் தொகை வழங்கியதில் தான் ஊதிய உயர்வு இரண்டாவது தவணை நிலுவைத் தொகையும் 1.1.2010 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி நிலுவைத் தொகையும் வழங்கப்பட்டது.

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கத்தின் பொன்விழா ஆண்டு மாநாடு 21.3.2010ல் சென்னையில் நடைபெற்றபோது அதில் மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை மத்திய மாநில அரசுக்கும் தெரிவித்திருந்தோம். அது என்னவென்றால், பொதுத்துறை நிறுவனமான மின்வாரியம் கமர்ஷியல் அக்கவுண்டிங் முறை என்று கூறிக்கொண்டு ஆண்டு வரவு செலவு கணக்கு முறையை தயாரித்தளிக்கும் போக்கு தவறானது என்று சுட்டிக்காட்டியுள்ளோம். அதை நாம் புதியதாக சுட்டிக் காட்டவில்லை. ஐந்தாண்டு திட்ட அமலாக்கத்தின் போது தமிழக மின் வாரியம் மற்றும் பொருளாதார மேம்பாடு பற்றிய ஆய்வு செய்து அண்ணாமலை பல்கலைக்கழக பொருளா தாரத்துறை தலைவராயிருந்த திரு.சோணாச்சலம் என்பவர் எழுதிய “எலக்டிரிசிட்டி அண்டு எக்கனாமிக் டெவலப்மெண்ட் அப் மெட்ராஸ் ஸ்டேட்” என்ற புத்தகத்திற்கு வழங்கிய முன்னுரையில் முன்னாள் மத்திய அமைச்சர் வி.கே.ஆர்.வி. ராவ் அவர்கள் “மின்சாரம் பயன்படுத்தாமல் ஆகும் உற்பத்தி மேம்பாட்டுக்கும் மின்சாரத்தை பயன்படுத்தி வரும் மேம்பாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு பார்த்தால் அந்த நிறுவனத்தின் பொருளாதார மூலதனத்தை மட்டும் கணக்கில் கொண்டு லாபக் கணக்கு போடக்கூடாது” என்று குறிப்பிட்டுள்ளார். அதைத்தான் தீர்மானத்தில் நாம் சுட்டிக் காட்டினோம். சில மாதம் கழித்து, மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவர் மான்டேசிங் அலுவாலியா அவர்கள் “மின்வாரியங்கள் பராமரிக்கின்ற வரவு செலவு கணக்கு முறை நம்பத்தகுந்ததாக இல்லை” என்று கூறியுள்ளார். அதைத் தொடர்ந்து அண்மையில் நமது பிரதமர் அவர்கள் நாட்டிலுள்ள மின்வாரியங்களின் செயல் பாடுகள் மற்றும் பொருளாதார நிர்வாக முறைப்பற்றி ஆய்வு செய்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். எனவே இதையெல்லாம் கருத்தில் கொண்டால் மின்வாரியம் இனி நஷ்டக் கணக்கை தொடர்ந்து கூறிக்கொண்டிருக்க முடியாது.

இதையெல்லாம் ஏன் கூறுகிறேன் என்றால் நமது அணுகுமுறையை செம்மைப்படுத்தி ஒன்றுபட்டு செயல்பட்டால் தொடர்ந்து நாம் நன்மைகளையும் பாதுகாப்பினையும் பெற முடியும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

**- M.S. தீனதயாளன்,** செயலாளர்.